

வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட அல்லாபுரம் பகுதி 54 வார்டு பகுதி புதிய நியாயவிலை கடையை மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்எல்ஏ திறந்து வைத்து, முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். இதில் மாநகராட்சி மேயர்சுஜாதா ,மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, பகுதி செயலாளர் சி.எம்.தங்கதுரை, மாமன்ற உறுப்பினர்கள் பி.சுதாகர் , ஜெய் மற்றும் கழக நிர்வாகிகள் , பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கோவை மாநகர் மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம் செய்வதற்கான சிறப்பு முகாம்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!



கோவை, நவ.13-

கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல்,நீக்குதல்,திருத்தம் செய்தலுக்கான சிறப்பு முகாம்,

29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தவும் கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

வருகின்ற 16.11.2024, 17.11.2024, 23.11.2024 மற்றும் 24.11.2024 ஆகிய 4 நாட்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

இந்த வாக்காளர் பட்டியலில் விடுபட்டவர்கள் புதிதாக பெயர் சேர்க்கவும் ,

பெயர் மற்றும் முகவரி திருத்தம் செய்யவும், பெயர் நீக்கம் செய்திடவும் வருகின்ற 16.11.2024 சனிக்கிழமை, 17.11.2024 ஞாயிற்றுக்கிழமை

23.11.2024 சனிக்கிழமை மற்றும் 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை ஆகிய 4 நாட்கள் அந்தந்த பகுதியில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில், வாக்காளர் சிறப்பு முகாம் காலை 9:30 முதல் மாலை 5:30 வரை நடைபெற உள்ளது.

இதில் 01.01.2025 ஆம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு, 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்கள் அனைவரும் தங்களுடைய பகுதியில் இருக்கும் வாக்குச் சாவடிக்கு சென்று படிவம்(6) ஐ பூர்த்தி செய்து தங்களை இணைத்து கொள்வதற்காகவும், பெயர் நீக்கத்திற்கு படிவம் 7 ம், வாக்காளர் அட்டையில் திருத்தத்திற்கு படிவம் 8 ம், முகவரி மாற்றத்திற்கு படிவம் 8 A வும், ஏற்கனவே வாக்காளர்களாக உள்ளவர்களும் தங்களுடைய பெயர் வாக்காளர் பட்டியலில் உள்ளதா என சரி பார்த்துக் கொள்ளவும்.

இந்த சிறப்பு முகாமை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம், திருத்தம் செய்யwww.nvsp.in என்ற இணையதளம் மூலமாகவும் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யலாம்.

மேற்கண்ட நாட்களில் நடைபெறும் இந்த முகாம்களில்,

கோவை மாநகர் மாவட்டத்திற்குட்பட்ட பகுதிக் கழகச் செயலாளர்கள் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்களின் ஆலோசனைகளைப் பெற்று, அந்தந்த வட்டங்களுக்குட்பட்ட வாக்குச் சாவடி நிலைய முகவர்கள்(BLA2), பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள்,

அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக செயல் வீரர்கள் அனைவரும் தங்களது வட்டங்களில் உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடிக்கு சென்று புதிய வாக்காளர் சேர்த்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு :

மேற்காணும் இந்தப் பணிகளுக்குண்டான ஏற்பாடுகளை பகுதிக்கழக செயலாளர்களும், வட்டக் கழக செயலாளர்களும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் நா.கார்த்திக் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.கே. கோட்டையப்பன்

**நவம்பர் 13 (1996)**



**தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**சிவந்திப்பட்டி பஞ்சாயத்து தலைவராகவும் – மாவட்ட நிலவள வங்கி தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் “இளைஞர் அணியின் செயல்திறன் மிக்க சிங்கக் குட்டியாகவும், அனைவரையும் அரவணைத்து கழகத்தின் ஆக்கப்பணிகளை அயர்வின்றி நிறைவேற்றுகிற அமைதியின் உறைவிடமாகவும் திகழ்ந்தவர்” என தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# திராவிடம் சாதி பார்த்ததா?



என்ன செய்கிறோம், எது செய்கிறோம், யாரை நோக்கி செய்கிறோம், எவரைக் கொண்டு செய்கிறோம் எனும் எந்தவிதமான தெளிவும், நியாயமும் இல்லாமல் சிறுமனம் கொண்ட சிலர் பலவிதமாய் உறுமிக் களித்த காட்சிகளையெல்லாம் கடந்த சில நாட்களில் கண்டு வலி கொண்டதால் எழுதுகிறேன்.

கொள்வோர் கொள்க!

திராவிடம் எனும் தத்துவத்துக்கு ஆதாரமாக நின்றிலங்குபவர்கள் மூவர்!

திராவிடத் தத்துவத்தை முன் மொழிந்தவர் பேரறிஞர் அண்ணா எனில், அதனை ஆட்சி வழி நின்று ஒருங்கே செலுத்தி செழிக்கச் செய்தவர் கலைஞர் எனில், அதனை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செலுத்தும் ஆளுமை படைத்தவராக நின்றமைபவர் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்பது எனது துணிபு!

கவனியுங்கள்...

விடுதலைக்கு முன்னும் பின்னுமான நாட்கள் எப்படியானதாக இருந்தது என்பதை இன்றைய தலைமுறை அறியாது. வெள்ளையனுக்கு அருகாமையில் இருந்தவர்கள் மட்டுமே ஆண்டான் என்றும் மற்றெல்லோரும் அடிமைகளே எனவும் ஜனநாயகத்துக்கு அப்பாற்பட்டு இந்திய அரசியல் நகர்ந்த ஆபத்தான காலம் அது. எல்லாம் வல்ல ஜமீன்தாரிகளின் சொல்லே எடுபடும், ஏழை ஜனங்களின் சொல் அம்பலம் ஏறாது எனக் கொள்ளப்பட்ட காலம் அது.

அன்றந்த நாளில், “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” எனும் திருவள்ளுவ வாக்கினை வழிமொழிந்தபடி தகதகவென தோன்றியது தான் திராவிட இயக்கம்.

எளிய பின்புலத்தில் இருந்து புறப்பட்ட புரட்சிக் குரல்களுக்கு சொந்தக்காரத் தலைவர்களான பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் போன்றவர்கள் சமூக நீதிக் கொள்கையை முன்வைத்தவர்களாய், “மக்களுக்கு மிக நெருக்கமான எங்களைக் கடந்து உங்களது பொருளாதார ஆதிக்கங்களை நிரூபிக்க முடியும் எனில், முயன்றுதான் பாருங்களேன்” என்றபடி சுற்றிச் சுழன்றார்கள்.

ஆம், “எல்லோரும் சமம் என்பதை எவர் மறுத்தாலும் அதை எதிர்ப்போம்” என்பதுதான் திராவிட இயக்கத்தின் தத்துவமாகும். அன்றைய பெருந்தலைவர்களின் உரை வீச்சுகளின் பங்களிப்பு அற்புதமானது. அதிமதுரமானது.

தோழர் ஜீவா உள்ளிட்ட கம்யூனிஸ்டுகளின் அன்றைய பங்களிப்பு பெரிய காரியம் செய்தன. ஊன்றி, உரம் கூட்டின! சுற்றிச் சுழன்ற அன்றைய தலைவர்களின் பேருழைப்பு சாதாரணப்பட்டதல்ல. அது யுக யுகாந்தர உழைப்புக்கு ஈடானதாகும். ஆம், மக்களின் நல்வாழ்வே நல்லரசியல் என முன்வைத்து போராடி எழுந்த இயக்கமே திராவிட இயக்கமாகும்! அதனை விரித்துப் பேச அதிகம் உண்டு எனினும் இந்தளவில் முடித்துக்கொண்டு எனது கட்டுரையின் நோக்கத்தை தொடர்கிறேன்...

அன்றொரு நாள் முத்தமிழறிஞர் கலைஞர் தனது ‘முரசொலி’யில் மனம் வெதும்பியபடி இவ்வாறு எழுதினார்... “பார்ப்பனர்களுக்கு நான் எதிரானவன் என சிலர் சித்தரிக்கின்றார்கள். சாவியும், திருவள்ளுவர் ஓவியத்தை நமக்குத் தந்த வேணுகோபால் சர்மாவும் எனது இரு கண்கள் எனக் கொண்டவன் நான் என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள்...”

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் இந்தக் கூற்றுக்கும், அவருக்கு இணையானவர் தான் அவரது வழித்தோன்றலான முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் என்பதற்கும் சத்திய சாட்சிகள் பற்பல உள்ளன இங்கே! அதனை எடுத்துரைப்பது எனது கடமையாகிறது.

“அக்கரகாரத்து அதிசய மனிதர்” என பேரறிஞர் அண்ணா அவர்களால் அழைத்து அரவணைக்கப்பட்டவர் வ.ராமசாமி ஐய்யங்கார்! “விழுந்தது ஆங்கிலக் கொடி; எழுந்ததே மணிக்கொடி!” எனச் சூளுரைத்தபடி மணிக்கொடி எழுத்தாளர்களை உலகுக்கு அறிமுகப் படுத்திய பேராளர் அவர்.

மணிக்கொடி எழுத்தாளர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் புதுமைப்பித்தன், மௌனி, கு.ப.ராஜகோபாலன், ந.பிச்சமூர்த்தி போன்ற இன்னும் பலர்.

பாரதியாரின் அருமை சீடராம் வ.ரா. அவர்களின் இலக்கிய தொண்டுள்ளத்தின்பால் மிகுந்த மரியாதை வைத்து ஆர அரவணைத்தவர் கலைஞர். அவரது மறைவுக்குப் பின் அவரது மனைவியார் துயர் கொள்கிறார் என கல்கியின் வழியே அறிந்ததும், உடனடியாக அந்த காலத்திலேயே ஆயிரம் ரூபாய் பென்ஷன் தர உத்தரவிட்டவர் கலைஞர்.

சொல்லுங்கள், திராவிடம் சாதி பார்த்ததா? பார்ப்பனருக்கு எதிரானதா?

அன்றந்த நாட்களில், சென்னை கலங்கரை விளக்கத்துக்கு அருகே இருக்கும் கடற்கரை மணற் பரப்பில், தனது அமைச்சர் படை சூழ அமர்ந்து நாட்டு நடப்பு குறித்து விவாதிக்கும் வழக்கம் கொண்டவர் கலைஞர்.

பத்திரிகையாளர் குரலும் அதில் ஒலித்தால் நன்று எனும்படியாக சாவி அவர்களையும் அந்த விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து சொல்லச் செய்வது கலைஞரது வழக்கம். அன்று, சாவி அவர்களின் மகனாரின் திருமணம்.

அதில் கலந்து கொண்ட கலைஞர் மணமக்களை வாழ்த்திய பின் தனக்கே உரிய நகைச் சுவையோடு “பாச்சா, உனது பாச்சா இனி பலிக்காது” என பஞ்ச் வைத்து பேசியவர், சாவி அவர்களிடம் திரும்பி, “இன்று பீச்சுக்கு வர இயலாது அல்லவா?” எனக் கிண்டலடித்தபடி கிளம்பியிருக்கிறார்.

அன்று மாலை, தன் மனைவியிடத்தில் மட்டும் சொல்லிக் கொண்ட சாவி, கல்யாண மண்டபத்தின் உக்கிராண அறைக்குள் சென்று சீர் முறுக்கு, லட்டு, அதிரசம் போன்ற கல்யாண பட்சணங்களை இரண்டு மூன்று பைகளில் நிரப்பிக் கொண்டு, கலங்கரை மணற்பரப்பை நோக்கி விரைந்திருக்கின்றார்.



“கல்யாண கொண்டாட்டத்தை விட்டு இங்கு எதற்கு வந்தீர்கள்?” எனக் கேட்ட கலைஞரிடம், “கலைஞரோடு இருப்பதைவிட கொண்டாட்டம் வேறு ஒன்று உண்டா?” என கேட்டிருக்கிறார் சாவி. “கலைஞரிடம் இவருக்கு இப்படியும் ஓர் அன்பா?” என சூழ்ந்தவர்கள் வியந்து போனார்களாம்! சொல்லுங்கள், திராவிடம் சாதி பார்த்ததா? பார்ப்பனருக்கு எதிரானதா?

மைசூர் சமஸ்தானத்தில் தான் கொண்ட கைப்பொருளை எல்லாம் மூன்று திரைப்படங்களை எடுத்து இழந்த பின்பு, தனது பரம்பரை தமிழ் போதனையையும் ஓயாத ஓவிய உழைப்பையும் கொண்டு திருவள்ளுவருக்கு திருவுருவம் கண்டு நின்றவர் ஓவியப் பெருந்தகை கே.ஆர்.வேணுகோபால் சர்மா அவர்கள்.

**ஸ்ரீராம் சர்மா**
எழுத்தாளர்



அவரை வழி நடத்தி அவரது பேருழைப்பை முன் மொழிந்தவர் பேரறிஞர் அண்ணா எனில், அந்த திருவள்ளுவர் திருவுருவத்தை சட்டசபையில் நிலைநாட்டியதோடு, அதனை நாட்டுடைமையாக்கி வைத்த பெருமைக்குரியவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

1959-ல் திருவள்ளுவர் திருவுருவ வெளியீட்டு விழாவில் பேசியபோது, “திருக்குறள் - திருவள்ளுவர் - வேணுகோபால சர்மா என்னும் மூன்று பெயர்களுக்கும் இந்த தமிழக மண் நன்றிக் கடன்பட்டுவிட்டது” எனப் பிரகடனம் செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

தனது குறளோவியம் புத்தகத்தின் ராயல்டி தொகையின் முன்பணத்தை ஓவியப்பெருந்தகைக்கு “இது எனது காணிக்கை” என அளித்து பெருமைப்படுத்தி அதனை ‘முரசொலி’யில் எழுதிப் பதித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

வேணுகோபால் சர்மா மறைந்தபோது அவரது வீடேறி வந்த பேராசிரியர் பெருந்தகை அவர்கள் “ஐயகோ, எங்கள் திராவிடச் சூரியனை பறிகொடுத்தோமே...” எனத் தந்தி பத்திரிகைக்குப் பேட்டி அளித்தபடி ஆறடி உயரத்திலிருந்து கண்ணீரை சொறிந்தபடி நின்றார்.

சொல்லுங்கள், திராவிடம் சாதி பார்த்ததா? பார்ப்பனருக்கு எதிரானதா?

வேலுநாச்சியார் வரலாற்றை கலை வடிவில் மீட்டெடுக்க பல்லாண்டுகளாக தியேட்டர் நிகழ்வை அரும்பாடுபட்டு நிகழ்த்தி வருகிறேன் என்பதை அறிந்ததும்,

தனது ஓயாத வேலைப்பளுவுக்கு இடையே நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது பொன்னான இரண்டு மணி நேரத்தை ஒதுக்கி கலைவாணர் அரங்கத்துக்கு வந்திருந்து முழுவதுமாக எனது படைப்பை கண்டதோடு மட்டுமல்லாமல், தன்னந்தனியாக மீண்டும் மேடையேறி வந்து என்னையும், எங்கள் தியேட்டர் கலைஞர்களையும் தனிப்பட்ட முறையில் வாழ்த்திப் பெருமைப்படுத்தினார்.

“இந்த வீர தியாக வரலாற்று நிகழ்வை தமிழகமெங்கும் நிகழ்த்துங்கள். குறிப்பாக, ராணி வேலுநாச்சியார் ஊன்றி வாழ்ந்த சிவகங்கை



அரண்மனையிலேயே இதனை நீங்கள் நிகழ்த்த வேண்டும்” என உள்ளன்போடு உத்தரவிட்டார். இன்றளவும் என்னை ஆதூரத்தோடு அரவணைத்து பேரன்பு செலுத்துகிறார்.

எனது தந்தையார் வேணுகோபால் சர்மா கண்டடைந்த, ஒன்றிய - மாநில அரசாங்கங்களால் அங்கீகரிக்கப்பட்ட, உலக மாந்தர்கள் எல்லோருக்கும் பொதுவான அந்தத் திருவள்ளுவர் திருவுருவத்தை இன்றைய அரசாங்க பேருந்துகளில் எல்லாம் அமைக்க உத்தரவிட்டவர் முதல்வர் கலைஞர். இது அடுத்து நடந்த ஆட்சியாளர்களால் கைவிடப்பட்டது. ஆனால் இது குறள்வழி ஆட்சி என்பதை நிரூபிக்கும் வகையில் நடந்த திருவள்ளுவர் திருவுருவத்தை மீண்டும் அனைத்து பேருந்துகளிலும் இடம் பெறச் செய்து மகிழ்ந்தவர் நமது முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களே!

மேலும், எனது தந்தையார் வாழ்ந்து மறைந்த அந்த சாலைக்கு “ஓவியப் பெருந்தகை வேணுகோபால் சர்மா சாலை” எனும் பெயரை சூட்ட முடிவெடுத்ததும் முதல்வர் முத்துவேலர் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் அரசாங்கம்தான்.

சொல்லுங்கள், திராவிடம் சாதி பார்த்ததா? பார்ப்பனருக்கு எதிரானதா?

“ஜாதி மதங்களைப் பாரோம் உயர்
ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே அன்றி
வேறு குலத்தின ராயினும் ஒன்றே

எனும் பாரதியாரின் வாக்கிற்கிணங்க செங்கோல் செலுத்தும் நமது முதல்வரின் இந்த ஆட்சியை முழுமையாக உணர்ந்து கொள்ளாமல், ஏதேனும் ஒரு குறை சொல்ல வேண்டுமே என மேடை போட்டவரே... அவசரக்காரர்களே... வக்கிழந்து போனீரே, வகையிழந்து போனீரே! உங்களது திண்ணைப் பேச்சும் - சினிமா வசனங்களும் அரசியலுக்கு ஆகாது என்பதை இனியேனும் உணர்வீரா?

பத்துப் பதினைந்து சுற்றத்தைக் கொண்டதொரு குடும்பத்தை வழி நடத்தவே நமக்கு நாக்கு தள்ளுகிறதே! ஏழெட்டு கோடி மக்களைக் கொண்ட இந்த ஒட்டுமொத்த தமிழ் நாட்டை ஒருங்கிணைந்து வழி நடத்துவது என்பது அவ்வளவு எளிதான காரியம் இல்லை என்பதை கிஞ்சித்தும் உணர்வீரா?

உங்களுக்கு ஓர் குறையுள்ளது எனில், அரசாங்கத்திடம் முறையாக எடுத்துச் சொன்னால், அதை செவிமடுத்து செய்ய இந்த அரசாங்கம் தயாராக உள்ளது எனும் போது மேடை போட்டு தூற்றுவதில் என்ன பயன்?

தயவுசெய்து உணர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் !

இதோ, பட்டினத்தாரின் பாடல் ஒன்றோடு முடிக்கிறேன்.

**கையொன்று செய்ய,**
**விழியொன்று நாடக்**
**கருத்தொன்று எண்ணப்**

**பொய்யொன்று வஞ்சக**
**நாவொன்று பேசப்**
**புலால் கமழும்**

**மெய்யொன்று சாரச்**
**செவியொன்று கேட்க**
**விரும்பும் யான்**

**செய்கின்ற பூசை**
**எவ்வாறு கொள்வாய்?**
**வினை தீர்த்தவனே !**

**நன்றி:**
**‘மின்னம்பலம்’ இணையதளம்**